முருகப்பெருமான் துணை

**மகான் அப்பூதியடிகள் நாயனார் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**29.01.2023**, ஞாயிற்றுக்கிழமை

1. தன்னார்வ தொண்டுகள் பெருகிட
   தயவான ஞானவழி காட்டும்
   அண்ணலே ஆறுமுக அரங்கனே
   அகிலமதில் உன் பெருமைகூறி
2. கூறியே சுபகிருது கலை திங்கள்
   குறைவிலா மூவைதிகதி கதிர்வாரம்
   (சுபகிருது வருடம் தை மாதம் **15**ம் நாள் **29.01.2023**, ஞாயிற்றுக்கிழமை)
   தெரிவிப்பேன் அனுகூல ஆசி
   தேசிகனுக்கு அப்பூதியடிகள் யானும்
3. யானும் உலகநலம் வேண்டியுரைப்பேன்
   உயிர்காக்கும் சன்மார்க்க நெறி
   ஞான நெறி ஞானபண்டிதன் நெறி
   ஞானிகளும் வழிமொழிந்து அருளும்
4. அருளும் உயர்நெறி அரங்கன் நெறி
   அடிபணிந்து வணங்கி ஏற்று
   பேருலக மக்களெல்லாம் வருக
   பெருந்தன்மை கொண்ட ஆளுமையாக
5. ஆகவே தலைமைகள் உருவாகி
   அமைந்திடும் ஞானஆட்சியாக
   செகமே பின்பற்றும் விதமாக
   சித்திகளை அரங்கன் தயவாலே
6. தயவாலே பரதம் முழுமை கண்டு
   தண்டாயுதன் வெளிப்படும் வண்ணம்
   நேயமிக்க காலம் கனிந்து
   நிலவுலகே அமைதி பாதுகாப்பு மிகுந்து
7. மிகுந்து எங்கும் முழுமைபெற்ற
   மேலவர்கள் அருளாசி கொண்ட
   தகுந்த துறைவாரியத் தலைமைகள்
   தன்னலம் கருதா சேவை சிறந்து
8. சிறந்துமே வளர்ச்சிக் காணும்
   சேவைக்கு பஞ்சமிலா வண்ணம்
   பரந்த உலகில் பண்பாளர்களாக
   பணியில் சிறந்து தலைமை யாவும்
9. யாவுமே ஆறுமுகனார் ஆசிபட
   எல்லா வகையும் ஏற்றம் பெறும்
   அவணி காக்க அவதாரமெடுத்த
   அரங்கமகானை அடையாளம் கண்டு

10. கண்டுமே உலகமக்களெல்லாம்
கருணை வேண்டி வணங்கிட
தொண்டுமிக்க அன்னதானமதில்
தொடர் சேவை ஆற்றிவர

11. வருகவே இடர்கள் தடைகள்
வையகத்தில் எதிலும் இல்லா
வருமுலகில் வளர்ச்சிப் பாதையாக
வையகம் கண்டு நிலைஉயரும்
அனுகூல ஆசி முற்றே

–சுபம்–